**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 155 of 2024

DATE : 04 .09.2025

Depositions of witness for Prosecution

PW : 9

| Name | முத்துக்குமார் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | முத்தையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of September 2025

**(எதிரி ஆஜர் இல்லை. 317 கு.வி.மு.ச–வின்படி மனு தாக்கல் செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் அமச்சியார்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

1) கடந்த 12.04.2022ம் தேதி 10.30 மணிக்கு நானும் அங்கம்மாள் என்பவரும் அமச்சியார்கோவில் அருகே எதிரி எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் அங்கம்மாள் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் எதிரி அவரது வீட்டிற்குள் இருந்து எடுத்து ஆஜர் செய்த அருவாளை எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் அங்கம்மாள் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் போலீசார்

விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது கையெழுத்து செய்வேன். புகார் முத்துராஜ் எனக்கு உறவினர் என்றால் பக்கத்து வீட்டுக்காரர். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதியான ஆஜர் எதிரி அவரது வீட்டில் இருந்து அருவாளை எடுத்து ஒப்படைத்தார் என்ற சங்கதி போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் நேரடியாக நான் ஆஜர் எதிரி அருவாளை ஒப்படைத்ததை பார்க்கவில்லை. ஆஜர் எதிரியை எனது முன்னிலையில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் முன் விரோதம் இருக்கிறதா என்றால் இல்லை. அத்தாட்சியில் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு